செ.வெ.எண்:-01/2020 நாள்:01.04.2020

**திண்டுக்கல் மாவட்டம்**

# கொரோனா வைரஸ் நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வயைில் நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் தங்கள் நன்கொடைகளை வழங்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

2020 மார்ச் 11 அன்று உலக சுகாதார அமைப்பு, புதிய கொரோனா வைரஸ் நோயை (கோவிட்-19) ஒரு உயிர்க்கொல்லித் தொற்று நோய் என்று அறிவித்துள்ளது. நமது மத்திய அரசம் கொரோனா வைரஸ் நோயை தேசிய பேரிடராக அறிவித்துள்ளது. மேலும், 25.03.2020-ம் தேதியில் தொடங்கி 21 நாட்களுக்கு 14.04.2020 வரை தேசிய அளவிலான ஊரடங்கிற்கு மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், உத்தரவிட்டுள்ளார்கள். இந்த கடுமையான, சவாலான பணியில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கும் வகையில், மக்கள் நலனில் அக்கறை செலுத்தும் குடிமக்கள், நிறுவனங்கள், அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் நன்கொடையாளர்கள் ஆகியோர் முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு தாராளமாக தங்கள் பங்களிப்பினை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். எனவே, நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் தங்கள் நன்கொடைகளை மின்னணு மூலம் பின்வருமாறு வழங்கலாம்.

(i) வங்கி இணைய சேவை (Net Banking) அல்லது கடன் அட்டை / பற்று அட்டை (Credit Card/ Debit Card) - மூலமாக கீழ்கண்ட இணையதளம் வழியாகச் செலுத்தி இரசீதினைப் பெற்றுக் கொள்ளலாம்.
**https://ereceipt.tn.gov.in/cmprf/cmprf.html**

(ii) Electronic Clearing System (ECS) மூலமாக கீழ்க்காணும் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அனுப்பலாம்.

| | | |
|---|---|---|
| வங்கி பெயர் | : | இந்தியன் ஓவர்சீஸ் வங்கி |
| கிளை | : | தலைமைச் செயலகம், சென்னை-600 009 |
| சேமிப்புக் கணக்கு எண் | : | 117201000000070 |
| IFS code | : | IOBA0001172 |
| CMPRF PAN | : | AAAGC0038F |

ECS மூலமாக நிதி அனுப்புவோர் உரிய அலுவலகப் பற்றுச்சீட்டினைப் பெற ஏதுவாக கீழ்க்கண்ட தகவல்களைக் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் | : |
| செலுத்தும் தொகை | : |
| வங்கி மற்றும் கிளை | : |
| செலுத்தப்பட்ட தேதி | : |
| நிதி அனுப்பியதற்கான ID எண். | : |
| தங்களது முழுமையான முகவரி | : |
| இ-மெயில் | : |

வெளிநாடு வாழ் மக்களிடமிருந்து நிவாரண நிதி வரவேற்கப்படுகிறது. வெளிநாடு வாழ் மக்கள் கீழ்க்கண்ட SWIFT Code-ஐப் பின்பற்றிட கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**IOBAINBB001 Indian Overseas Bank, Central Office, Chennai**

மின்னணு மூலம் பரிவர்த்தனை செய்ய இயலாதவர்கள் குறுக்குக் கோடிட்ட காசோலை அல்லது வங்கி வரைவோலை மூலமாக, கீழ்க்கண்ட முகவரிக்கு தங்கள் நன்கொடையை அனுப்பலாம்:-

அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், முதலமைச்சர் பொது நிவாரண நிதி, நிதித்துறை, தமிழ்நாடு அரசு, தலைமைச் செயலகம், சென்னை-600 009, தமிழ்நாடு, இந்தியா, மின்னஞ்சல் முகவரி:- dspaycell.findpt@tn.gov.in

நன்கொடைகளை மாண்புமிகு முதலமைச்சரிடமோ, திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமோ நேரிடையாகக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். பெறப்படும் அனைத்து நன்கொடைகளுக்கும் உரிய இரசீதுகள் அனுப்பி வைக்கப்படும். மேலும், நன்கொடைகளுக்கு வருமான வரிச்சட்டம் பிரிவு 80(G) ன் கீழ் 100 சதவிகித வரிவிலக்கு உண்டு. வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRIs) அல்லது வெளிநாட்டு மக்களிடமிருந்து பெறப்படும் நிவாரணத்திற்கு அயல் நாட்டு பங்களிப்பு (ஒழுங்காற்று) சட்டம் 2010, பிரிவு 50-ன் கீழ் விலக்களிக்கப்படும். (இந்திய உள்துறை அமைச்சக ஆணை எண்-F.No.II/21022/94 (1124)/ 2015-FCRA-III, நாள்:22.12.2015)

இவ்வேண்டுகோளை ஏற்று திண்டுக்கல் மாவட்ட மக்கள் தாராளமாக முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையை வழங்கலாம் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**

---